ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

கப்பற்பாட்டென்னும்

பலசரக்கு

ஏலப்பாட்டு.



வித்தியாரத்நாகரம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை] 1929. [அணா-1.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

திருவல்லிக்கேணி

ஸ்ரீபார்த்தசாரதிப்பெருமாள்பேரில்

பலசரக்கு ஏலப்பாட்டு.



சென்னை

வித்தியாரத்நாகரம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1929. [அணா-2.

ரிங்வோரங் கியூர் என்னும்

படை சங்காரன்.

ஐயா,

உம்முடைய தேகத்தில் எந்த பாகத்திலாவது மேகப்படைகள் அல்லது பெண்களுடைய தேகத்தில் எவ்வித படைகள் இருந்தாலும் எமது (படை சங்காரன்) என்னும் மருந்தில் கொஞ்சம் எடுத்து படையுள்ள யிடத்தில் தடவி நன்றாய்த்தேய்த்து மூன்றுமணிநேரம் பொருத்து சோப்பு அல்லது சீக்காய் போட்டு தேய்த்து அலம்பிவிடவும். இது போல் இரண்டு அல்லது மூன்றுவேளை மேற்சொன்னபடி செய்தால் நல்ல குணத்தைக் காணலாம். இந்த மருந்தினுல் அனேகர் சுகமடைந்து நற்சாட்சி பத்திரம் அனுப்பியிருக்கிறார்கள்.

ஒருபுட்டியின் விலை ரூபா—1.

எமது கேட்லாக் வேண்டுமானுல் அரையணு ஸ்டாம்பு அனுப்பினுல் அனுப்பப்படும்.

எனது விலாசம்

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்,

பிரம்பூர் பாரக்ஸ் போஸ்டு, மதராஸ்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

திருவல்லிக்கேணி

ஸ்ரீபார்த்தசாரதிப்பெருமாள்பேரில்

பலசரக்கு ஏலப்பாட்டு.

வெண்பா.

அண்டர்துயர்களைய அவதரித்துப்புவிதனிலும்
எண்டிசையோரும்போற்று மீசனே—மண்டலத்தி
லறியேன்நின்மேல்ஏலப் பாட்டுரைக்கவெங்கோவே
சிறியேன்மனதைத் திருத்து.

ஏலேலோ குருபாதம் அம்பாள்
ஏலேலோ குருபாதம்.

விநாயகனே முன்னடவாய் நான்முகன்றன் சரஸ்வதியே என்னுவினுள்ளே வாருமம்மா சீர்பொழியுந் திருவல்லிக் கேணியெனும் புரிதனிலே வாசமாய் வீற்றிருக்கும் பார்த்தசாரதியுந் தேவியுடன் வேதவல்லித் தாயார்க்குக் கப்பல் காணிக்கைகள் வெகுவிதமாய்ப்பாரமுடன் சரக்குகட்டி ஓடிவருஞ் சந்திதிக்கே.

ஐ ரூ ர்.

நாழிகையொன்றுக்கு நானூறுகப்பல்-நாடோறுந் தப்பாமல் தினம்வந்திறக்கும், சீருடைய படித்துறைக்கு கப்பல்வருஞ்சேதி-சென்னப்பட்டணங்கோட்டை ஜனங்களெல்லாங்கேட்டுப், பூரித்துஆனந்த சந்தோஷமாக-புதுமைகள்பார்க்கவந்துகரைதனிலே நிற்க, பாரியவர்த்தகர்கள் செட்டிகோமுட்டி-பட்டணத்திலுள்ளகுடி யின்னுஞ்சிலபேர்கள், வேணுமென்றசரக்குகள் வேணபடிகொள்ள - மாட்டதனில்பணங் கொணர்ந்தவர்களிங்கே, பேரானபேர்பெற்ற சென்னைபுரியாளும்-பெரியதுரைசின்னதுரை எல்லாருங்கேட்டு, நாடாளுமிங்கிலீஷ் கொடிக்காரரெல்லாம்-நாலாயிரம்ஜனங்கள் வந்துமேநிற்க,ஓடாததண்ணீரில் லங்கரதுபாய்ச்சி - ஒருபுறமாய்க் கப்பலெல்லாம் கரைதனிலேசேர்க்க,வேதவல்லித்தாயார் கடாட்சத்தினாலே-வேகமுடன்கப்பல்வந்து சேர்ந்துதை. யாசுவாமி ஏலேலோ ஏலலீலோ.

பொங்கிவரும் கடலோரம் தாயார்பூமகளாஞ் சந்நிதிக்கே மங்களமாய்ச் சரக்குகப்பல் இங்கேவந்திருக்கும்படித்துறைக்கு நிரப்பிவருஞ் சரக்குகட்டி நெறபாரத்துடன் கனத்துவருந் தங்கிவரும்வழிதனிலே சற்றேற தாமதங்களில்லாமல்.

ஓட்டம்.

எங்கெந்த தீவாந்தரத்திலிருந்து எண்ணிசொல்லி முடியாத சரக்குகளைக்கொண்டு பஞ்சவர்னக் கிளி கொஞ்சும் பங்காளதேசம் பலவிதமாய்நெல்விளையும் பால்வடியுஞ்சம்பா சிறுமணியும் பெருமணியுஞ் சிறுராசிநெல்லு கொடிசம்பா மணக்கத்தை குங்கு மச்சம்பா கொத்துமுத்துச்சம்பா குடமல்லிச்சம் பா மல்லிகைச்சம்பா மணமுள்ளச்சம்பா பங்காள தேசத்தில் வால்நீண்டநெல்லு அறுமந்தச்சம்பா அளவற்றச்சம்பா அந்தந்ததேசத்தில்விளைந்துவரும் நெல்லு கடுகுச்சம்பா மிளகுச்சம்பா கற்பூரச்சம்பா கன்னி யரிசியுடன் கருப்புநெல்லரிசி சேனைமழை பொழியுநல்ல மலையாளதேசம் துள்வெள்ளை நெல் விளையுந் தும்பைப்பூச்சம்பா ததியமாபர்வதத்தில் விளைந்துவருஞ்சம்பா சதுரானதேசத்தில் விளைந்து வரும்சம்பா கன்னியாகுமரியில் விளைந்துவரு நெல் லு ஸ்ரீரங்கராஜருக்கு விளைந்துவருநெல்லு திருவர ங்கநாயகிக்கு விளைந்துவருஞ்சம்பா செம்பாளை பூம் பாளை சுகதாதியரிசி கல்லுண்டை நெல்லுண்டை கார்போகத்தரிசி கட்டையரிசியுடன் கப்பலிலுள்ள மலைதுவரை சிறுதுவரை கடலைப்பயருளுந்து மற்று மந்தகோதுமை நவதானியச் சோளம் கரிமஞ்சள்

பொடிமஞ்சள் காரமுள்ளமஞ்சள் கப்பமஞ்சளுடன்
பங்காளமஞ்சள் மலைத்தேன்கள் சிறுதேன்கள் காட்
டிலுள்ளதேன்கள் நல்லவாய்க் கிசைந்தவொரு தீவ
தாட்சிகளுந் தேன்பாகு மணப்பாகு சீமைகற்கண்டு
சீனிசர்க்கரையோடு சேர்ந்தநல்லவெல்லம் பனங்
கற்கண்டு சர்க்கரை உள்ளிலெங்காயம் காசிருக்கும்
புலிச்சக்கை நீரடிமுத்துகள் களிப்பாக்கு சிறுபா
க்கு கலியாணப்பாக்கு கற்காம்பு சீல்வத்தி காட்டுக்
கொம்பரக்கு கம்மாறுகைச்சோடு வெற்றிலைகள்நல்ல
கடல்முத்துசுண்ணாம்பு காரமுள்ள புகையிலைசீரகம்
பெருங்காயஞ் சதகுப்பிஓமம் சேர்ந்தவொருவெந்தய
மும் கொத்தமல்லிவிரையும் கடுகுகள் மிளகுகள்
களர்ச்சிக்கயேலம் கடுக்காய்ப்பூ சிறுலவங்கப்பட்டை
யொடுபத்ரி சுக்குதிப்பிலிமோடி செவியமொடு கோ
ஷ்டம் தடமாஞ்சியதிமதுரம் கண்டுபரங்கி சிற்றரத்
தை சிறுதேக்கு செந்தூர தும்பராஷ்டம் சிறுகாவல்
பூவோடு குருகாணிஓமம் மற்றுமந்த வாய்விளங்கம்
மராட்டியமொக்கு பாங்கிசக்கையுடன் காட்டுசீரகம்
அதிமதுரம் லவங்கப்பூ தாளிசப்பத்திரி அக்கிரா
காரங்கள் கடுகுரோகணியும் கற்பூரதிலுசுகள் கட்டி
சாம்பிராணி மெழுகுகள்கட்டி குங்கிலியவெண்காரம்
படிகாரநவாச்சாரம் இந்துப்பு பாலுப்பு சயிந்துப்புல

ங்கம் துத்திநாகத்தோடு செந்தூரம் பச்சை சித்திரங்கவெழுதுநல்ல அரிதாரநீலம் ஏலக்காய் சாதிக்காய் வால்மிளகுலவுங்கம் ஏற்றமுள்ள சாபத்திரி சாதிக்காய்பட்டை குங்குமப்பூகஸ்தூரி கோரோசனங்கள் குமுகுமென்று பரிமளிக்கும் பச்சைகற்பூரம் சந்தனக்கட்டையின்சட்டங்கள்புனுகு சலவை பன்னீர் கதம்பமொடு அத்தர் பச்சிலேயும் கிச்சிலிக்கிழங்குகள் சந்தனபில்லே பரிமளம்வீசிவரும் கஸ்தூரிமஞ்சள் சந்தனத்தயிலங்கள் சாம்பிராணிவத்தி சம்பங்கிதைலங்கள் கிலெண்ணெய் பிப்பாய் ஸ்ரீகந்தமகிற்கட்டை தேவதாரிகளும் தீவிலுள்ளசரக்குகள் அபுரூபவஸ்து மலேவேர்கள் மலேயாளசஞ்சீவி நிலவேம்பு விஷமுட்டி வேம்புசூரணமும் செத்தவனே பிழைப்பிக்கும் சஞ்சீவிமருந்து வெட்டுண்ட காயங்கள் ஒட்டநல்லமருந்து வாழாதபெண்களுக்கு வாழ்வுதருமருந்து மைந்தரில்லாமலடிக்கு பிள்ளைதரு மருந்து கூடாத ஆணும்பெண்ணும் கூட்டிவைக்கு மருந்து குற்றமுள்ள குறைதீர்க்கும் குணமுள்ள மருந்து ஆண்டவனேபெண்பிறந்து அலேந்துகெட்ட பேரை ஆசையுடன் கூட்டிவைக்கும் அந்தரங்க மருந்து தேசாந்திரமோடி திசைகெட்டபேரை சீக்கிரமாய் கொண்டுவந்து சேர்க்குநல்ல மருந்து இந்த

லைமருந்துவகை இனிசொன்ன தினுசு இன்னமின் னஞ்சரக்குவகை பேர்சொல்லக்கேளும் பேர்சொல் லுஞ்சரக்குவகை ஆயிரங்கோடி இத்தனை சரக்கு வகை இசைவுடனே கப்பலெல்லாம் ஒருவழியே தள் ளி பத்திரமாய்வழிதனிலே தண்ணீரெல்லாந் தாண் டி பலசரக்கு கப்பல்வந்து சேர்ந்துதையா சுவாமி ஏலேலோ ஏலலிலோ.

இன்னமின்னஞ் சரக்குவகை ஏற்றமுள்ள கப்ப லிலே எண்ணிசொல்லிமுடியாது கொஞ்சம் சூட்சு முடன் சொல்லுகிறேன் கப்பலில்வருந் தினுசுகளை நம்மால் கணக்குசொல்லமாளாது.

ஜரூர்.

பட்டுகள்ஜாபிதா பச்சைபட்டுமுகமல் பங்காள தேசத்து பனியன்களோடும் சாரத்துப்பட்டி சல வையுருமால்கள் சரிகைநெய்த புடவைகள் சாயமு ள்ளத்தோம்பு மெத்தைக்குத் தகுந்தநல்ல தேல்தட் டுஜாலர் விதவிதமாக ரவைபட்டுச் சல்லாவெண்சே லை மேலுக்கழகான மாதளம்பூபட்டு மக்காசோளந் தனில் நெய்தவெண்பட்டு பலவர்னபட்டுடன் பஞ்ச வர்ணச்சேலை அச்சமால் கட்டநல்ல பச்சைபீதாம் பரம் ஆத்துருபழவேற்காடு பாக்குவர்னச்சேலை ஐ தராபாத்முதலான தாட்டிபத்திரிசேலை மிஞ்சிமுடிக்

கர்னதொரு செஞ்சத்துசேலை மேலான மேற்கத்தி
தேசத்துசேலை சென்டுகோட்டைச் சேலைகொண்ட
தொருகோடி கட்டாரிபட்டு புட்டாவர்னச்சேலை
மேலன்னசவுக்கிளி ரெட்டைமசிறுக்கி கண்டதொரு
புளியூரால் கொள்ளிநல்லசேலை நிலையங்கி தாரைகள்
நீண்டிருக்குங்குல்லா நிஜாருடன்பாவாடை யுருமா
லைசவுக்கும் நலமான ரவிக்கைகள் நாலுவிதச் சீட்டி
நார்மடி பட்டஞ்சு தேர்தைக்குங்கித்தான் ஜார்ஜீயுஞ்
சகலாத்து சனனதாவளையல் சட்டமுடன் துப்பட்டி
பறற்கலாரேக்கு போகிக்குஞ் சீமைநூல் பட்ட
ணத்துபெண்களுக்கு வாங்கநல்லபுடவை முத்துகள்
கல்லுகள் முத்துரத்னகெம்பு மோகனமாலைகளும்
முத்துசரமாலை நற்பவழம் சாதிலிங்கம் நாலுவித
பச்சை நவரத்னகல்லுகள் நாகரீகரவிக்கை வச்சிரங்
கள்வைடூரிய மாணிக்கநீலம் மஞ்சள்நிறம் கோமே
தகம் புஷ்பராகங்கள் மலிந்தவிலை கருப்புகள் மாந்
தாளிப்பச்சை மற்றுமந்தகப்பலிலே முத்துவந்தி
னுசு கோர்வைகொலுசுகளும் வையிலிடுமுத்து கோ
டானகோடி கல்லிழைத்த பாட்டில் அடுக்குவளை
தோள்வளையல் அதுகுண்டுவாங்கி அழகான பாசி
பந்து கையிலிடும்கொலுசும் கண்டசரப்பளிகள்தட
ல்முத்துமாலை கல்லிழைத்தபட்டயப் பழுத்திலிடும்

கண்டி ஆரங்கள்பதக்கங்கள் அட்டிகைகள் நல்ல அதுகளுக்குமேலான கனகதண்டிகைகள் காதுக்கு நிறைந்திருக்கும் கத்திரிபாவளிகள் கம்மலிடும்சிமிக் கிசரம்காதுக்குரச்சைவாளி ஆணிமுத்து கல்லிழை த்த அடுக்குமூக்குகம்பி அழகானபுலாக்கு அன்னமூ க்குத்தி கலிக்கத்துருவும் கல்லிழைத்த சுட்டியொடு பட்டியொடுபட்டம் காதுக்குநேரான திருநெற்றி சுட்டி சந்திரபிறை சூரியபிரை தலைநிறைந்தசாமான் தளதளனச் சாந்தியுடன் தங்கவொட்டியாணம் பாதசரஞ்சுருள்கொலுசு சிலம்புதண்டை யாட்டில் பத்துவிரல் மோதிரங்கள் மிஞ்சியுடன்மெட்டு காது க்கு சவுக்களிகள் கல்லிழைத்தகோடி கண்டசரபதக் கங்கள் முத்திரைகாசம் கல்லிழைத்த பெருங்கடுக் கன் மகரகுண்டலங்கள் மண்டலத்து ஜனங்களுக்கு வாங்கநல்ல நகைகள் ஆபரணவகையெல்லா மணிய ணியாய்வைத்து அதற்கேற்ற பெட்டிகள் பூட்டுகள் சாவி மோராவிராகன் சாளுரக்காசி மேலானசீமை யார் முத்திரைரூபாய் ஆதியிலுண்டான ஸ்ரீராமர் மேடை அதுகளைச்சார்ந்தவொரு காசுபணந்தன்னை அரக்கு முத்திரைவைத்து அடையாளம்கட்டி அடையாளமாகவே காசுபணமெல்லாம் அந்தந்தவிட த்திலே பத்திரம்பண்ணி சிறுமுத்து பெருமுத்து

சிறுராசிமுத்து தூரத்தில் விளைந்துவரும் சண்டக்காய்முத்து பருத்திமுத்து பெருத்தமுத்து பம்பாயி சீமையிலே விளைந்துவருமுத்து கவைந்தமுத்து உருண்டைமுத்து கட்டாணிமுத்து கருங்கடலில் விளைந்துவரும் காந்தியுள்ளமுத்து வாளிமுத்து நீலமுத்து வார்கடைமுத்து வையகத்து ஜனங்களுக்கு வாங்கநல்முத்து ஓட்டுமுத்து தந்தமுத்து செட்டிமுத்துநல்ல ஒப்பில்லா மாணிக்க ஜீவரத்தினங்கள் கோவர்த்தனகிரியில் வாங்கிவந்து கோபாலகிருஷ்ணனுக்கு சாத்தநல்லமுத்து அயோத்தியாபுரியில் வாங்கிவந்தமுத்து அரிராம லட்சுமணர்க்கு சாத்த நல்லமுத்து காசிதேசத்தில் வாங்கிதந்தமுத்து கனமானவர்த்தகர்கள் விலைமதித்தமுத்து பாதபுரிசீமையிலே வாரிவந்தவச்ரம் பலமான வர்த்தகர்கள் விலைமதித்த வச்ரம் குடகு தேசத்தில் வாங்கிவந்த கெம்பு கோடானவர்த்தகர்கள் விலைமதித்தகெம்பு டில்லிதேசத்தில் வாங்கிவந்த பச்சை தேசதடவர்த்தகர்கள் விலைமதித்த பச்சை நாலுதேசத்தில் வாங்கிவந்த ரத்தினம் நகர் சென்னப்பட்டணத்து துறைவந்திறங்க தங்கச்சட்டி வெள்ளிச்சட்டி தனித்தனியாய் வரவே தாம்பிரவெங்கலங்கள் பித்தளை துருக்கன் இரும்புசட்டமாய்க்கட்டி எழுகம்பிநல்ல இதுகளைக்

சேர்ந்ததொரு தண்டவாளங்கள் சீமைமண்சாடிகள் வளையோடு பீங்கான்கள் கிண்ணி திராவகம் பிராந்தியும் ஜின்னும் சாராயப் பீப்பாய்கள் தனித்தனியாய்வைத்து பச்சைநீலம் குமேலாப்புகண்ணாடி பச்சையில் பெரிதான பன்னீருகுப்பி கண்ணாடி கதவுகள் கைப்பெட்டிமேஜை சவுகிகள் குர்ச்சிகள் கட்டிலொடு தொட்டில் மெத்தைகள் திண்டுகள் வில்லைதலைக்காணி விதவிதமாய் மேற்கட்டு போகுந்துரைசாமான் மெழுகுசீலை கடந்தமேக்குகள்வேம்புவிதவிதமாய் சீமைநாய் குல்லாக்கள் சொக்காய் அடுக்குவத்திமெழுகுவத்தி அதற்கேற்ற பீடங்கள் அலங்கார கூடங்கள் மெழுகுவத்தி காந்தம் கனவிளக்கோடி காந்தியுள்ளவிளக்கு கண்ணுக்குஅழகானரசகுண்டு வரிசை சந்துக்கு அழகான சாயபொம்மைகளும் சாந்திருக்கதிண்டுகள் சரிகைமேற்பட்டு தங்கமொடுவெள்ளி தட்டுதாம்பாளம் நல்லசதிருக்கு ஏற்றதொருசாதிக்காய் கிராம்புவால்மிளகு லவங்கமொடு வண்ணமுள்ளபெட்டி வெற்றிலைமடித்து கோர்க்கும் வெள்ளியீர்க்குகளும் விதவிதமாய்ப் பன்னீருகுப்பியொடு கிண்ணிபட்டுப்பாய் பிரப்பம்பாய்ப்படுத்திலிருக்கும் பாவிப்பாய் பட்டணத்து துரைகளுக்கு கெட்டி தாழம்பாய் பட்டுரத்தினக் கம்பளிகள்

ஜோடுஜமக்காளம் பந்தலுக்கு ஏற்றதொரு மட்டம் பிரப்பம்பாய் கண்ணாடி காம்பிராக்கள் கட்டில்கள் சோபாகாட்டினிலேயுள்ள கலைமான்கள்கொம்புகளுந் திருக்கும் நல்ல வெண்சாமரங்கள் கிருஷ்ணாசனம் பேட்டை புலித்தோல்கள்நல்ல உட்கார்ந்து ஜவம் பண்ணுஞ் சித்ராசனங்கள் பட்டுக்குடை வெள்ளிக் குடை பச்சைக்குடை முத்துக்குடை வெள்ளைச் சீட்டிபாவாடை வெள்ளித்தடிகள் வேடிக்கையாகவே கப்பலில்வரவே தாளிப்பனையோலைகள் சீமைகடுதா சிபேனாக்கள் இங்கிபுட்டி பிரப்பந்தட்டு பீங்கான் கோழிகள் சேவல்கள் சிறுராசி பெருராசி ஆடுபல வகைகள் சரக்குபித்தளைகள் கட்டாயமாய்க்கப்பலிலே திட்டமாய்க்கட்டி அஷ்டலட்சுமிபொழியும் ஆனந்த கப்பல் அளவற்றபாக்கியங்கள் குறைவற்றசெல்வம் வேதலட்சுமிபொழியுந் திருவல்லிக்கேணி நினைத்த வரம் கொடுப்பாளந்த வேதவல்லித்தாயார் அஷ்ட லட்சுமி கடாட்சத்தினாலே ஏற்றமுள்ள கப்பல்வந்து சேர்ந்துதையா சுவாமி ஏலாலோ ஏலஷியலா.

பார்குழலாள் கப்பலிலே நல்லசஞ்சீவி மருந்து வகை வையகத்துஜனங்களும் நல்லவியாதிதீரும்மரு ந்துவகை பூமியிலே ஜனங்களுக்கு நல்லபொன்னாகு ம் இலைதினுசு.

ஐ ரு ர்.

பேரானரசவாத பச்சிலைகள் திணுசு பெருவியா திரோகமது சஞ்சீவிமருந்து க்ஷயரோகந் திமிர்வாய் வுதனுர்வாயுரோகம் கருமேகம் காமாலை மார்நோய் குன்மம் கண்குருடு செவிடுமை கால்மொண்டிமுடங் கள் ரணகாயப்புண்கள் வாங்குங்நல்ல மண்டையிடி தொண்டைகட்டு மகத்தானரோகம் மாளாதவியாதி கள் தீர்க்குநல்ல மருந்து திக்குதெரியாத திசை கெட்டபேர்க்கு தீவிரஞ்சனம்நல்ல சீமைதயிலங்கள் தேசத்து ஜனங்களுக்கு ஜெயமுள்ள மருந்து தேக மெல்லாஞ்சுந்தரமாய் அழகுதருமருந்து உலகத்து ஜனத்துக்கு உபகாரமருந்து ஒருநாளும் வியாதிகள் வாராதமருந்து மனிதற்கு சீமையில் சுரணைகெட்ட வர்க்கு மதனகாமேசுர ஆவிழ்த கஞ்சாக்கள் குல்கந் துவில்வாதி லேகியங்கள்யாவும் மேல்நாடு கீழ்நாடு மேல் நாடெங்கும் பேர்பெற்ற மருந்துவகை திணு செல்லாம் வகைவகையாய்வைத்து மற்றுமந்த கப்ப லிலே ஆழமட்டுஞ்சாமான் கதவுகுழையிரும்புசட்ட ங்கைபிடிகள் வளையம் கட்டிலுக்குந் தொட்டிலுக் கும் மூலமட்டசாமான் தலைக்கடைகதவுகள் கைப் பிடிக்குகைகள் வைரத்தூண்கம்பங்கள் வெண்கலப் பட்டங்கள் சாரங்கள் தயிலங்கள் சங்கிலிகள் குப்பி

தாவாரப்பெட்டிக்கு நெடுப்பூட்டுசானி காடைவிளக்குகள் கைவிளக்குநல்ல கலியாணபந்தலுக் கேற்ற குத்துவிளக்கு தூங்காவிளக்குகள் தூக்குமலை கொலுசு தொட்டிலுக்கு சங்கிலிகள் தோசைகல் லடுப்பு மண்ணுருவான வணுய்ச்சுரண்டி மண்வெட்டிகள் நல்ல பவட்டுகுந்தாலி பிஸ்கோத்துப்பாக்கிகள் பீரங்கிகுண்டு பல்லய்ம்ஈட்டிகள் பாங்குக் கட்டாரி கெடியாரமாணிக்கம் கும்பினிகம்பாரு ணைக்கு வகைதுகைசொல்ல இட்டசம்பாதிகள் ஆயுதத்திரங்களும் அலைமானத்துருப்பு ஆழத்தின்மீன்றிய நச்சுக்குழல் கொம்பு ஆனைகள் குதிரைகள் ஆயிரங்காலால்கள் ஆந்தோளிமைருக்கள் பல்லக்குடோலி கோதாட்கள் கூண்டுவண்டிசக்கரங்கள் சட்டம் குதிரைகள் பூட்டியசாரட்டு தண்டிகைமான்களோடு மயிலுகள் ஆடப்புறவும் மைனுக்கள் வாத்துகள் பஞ்சவர்னக்கிளிகள் பால்காக்கும்நல்ல பசுக்களோடெருமை பச்சைவெண்ணை கறந்தெடுக்க மாங்களோடுமற்றும் சீமையெலி பெருச்சாளி சிறுத்தையொடுமுயல்கள் தேவாங்குகருங்குரங்கு சிவந்தபூனைகளும் செந்நாய்காடி சிவங்கிகொண்டைமுயலும் சீமைநாய் வேட்டைநாய் இன்னமின்னஞ்ஜாதி கடம்பைகள் உடும்புகள் கோவேறுகழுதை கண்ணு

க்கு நிகரான சீர்மனுஷஜாதி விதவிதமாய்கப்பலிலே வேடிக்கையாக வேகமுடன் கப்பலிலே விசையோட்டம்வரவே சிறுமீன்கள் பெருமீன்கள் சிதறியங்கே யோட மலைபோல மீன்களெல்லாம் வந்தங்கே நிற்க நவுடுமாவுதான்கலந்து சமைத்த கொழிக்கட்டை தாமதங்களில்லாமல் எடுத்துமுன்னேபோட்டு அலை கடல் வழியெல்லாம் ஒருநொடியில்தாண்டி ஆனந்த கப்பல்வந்து சேர்ந்துதையா சுவாமி ஏலேலோ ஏலலிலோ.

சங்கமாபர்வதத்தில் நல்லசந்தனத்தால் சேர்த்த கப்பல் மண்டலத்து ஜனங்களுக்கு நல்லமாளிகைக் குமாதினுசு பட்டணத்து ஜனங்களுக்கு நல்ல பல விதமாய்ப் பழதினுசு.

ஐரூர்.

சதுர்கட்டு சதிரான எலுமிச்சம்பழங்கள் ஜாதி நாரத்தம்பழச் சர்க்கரை யன்னுச்சி செவ்வாழைப் பழக்குலைகள் சேர்ந்தரஸ்தாளி செவ்விளநீர் முதலான சீமையத்திபழங்கள் கிளிமூக்குமாம்பழம் மணியிலாகிச்சிலி வகையானமாதளம் பழங்களொடு

திணுசு சித்தாப் பலாப்பழமும் சொகுசான்சீனி செ
டிநாரத்தை கொடிநாரத்தை சீமைகிச்சிலிகள் கொய்
யாப்பழம் நல்லக் கொத்துதிராட்சப்பழம் கொடித
னில்விட்டுவருங் காட்டுமாம்பழங்கள் பேரிச்சம்ப
ழம்நல்ல பருப்புகற்கண்டு போனகச்சூரிய காயக
ளோடே திணுசு பட்டாணிமுந்திரி பருப்புகள் திணுசு
பழவகைகள் தினுசெல்லாம் விதவிதமாய்வைத்து
பங்காளகப்பலிலே பணியார திணுசு தொட்டுப்பால்
மனோகரம் தேன்குழல்பூரி துள்ளுமதிரசம் பாற்
குழம்புலட்டு சோமாசியென்பது பேணியதுவாகும்
தின்னும்பலகார மின்னமின்னங்கொண்டு சகிபின்
டபீமனுக்குச் சர்க்கரைமிட்டாயும் காரமுள்ளபால
ன்னந் தயிர்வெண்ணைப்பாலும் புளியோரைதத்தி
யானம் பொங்கல்வடைதோசை போகுமாம் அடிசில்
செய்யும் இட்டலிகள்நல்ல சர்க்கரைபொங்கல் ரசா
ன்னங்களோடு மிளகோரைஉண்டை அக்கார்வடிசி
கள் பங்காளபாத்து வேதவல்லித்தாயார் அடிசில்
செய்யும்வகையை விதவிதமாயின்னதென்று கணக்
கிடப்போமோ பார்த்தசாரதிதேவி அடிசில்செய்யும்
வகையை பணியாரவகைதிணுசு பழதிணுசுவகைகள்
பரிமளங்கள் வீசிவரும் புட்பவிதஜாதி சம்பங்கி

புட்பங்கள் ஜாதிமல்லிகைகள் சரங்களொடுமாலை
கட்ட சூரிவேர்கள் தவனம்பன்னீரு புட்பங்கள்பந்தி
புட்பங்கள் பட்டுசாமந்திகள் பலவிதமல்லி செண்
பகப்பூநல்ல செங்கழுநீராம்பல் சிறுசண்பகத்
தொடு சேர்ந்தநவமல்லி நீலவர்னபுட்பங்கள் நீலவிரு
வாட்சி மேலானசுரபுன்னை முல்லைசெந்தாழை புட்ப
வகை ஆவாரங்கள் பொட்டணங்கள்கட்டி பேர் நல்
ல தேக்கு காட்டிலுள்ளமரங்கள் கரிவோடு இரி
வோடு கருப்பமாஞ்சாதி வெண்தேக்கு பூந்தேக்கு
வெட்பாலைமரங்கள் வேப்பல்நாவல்மரம் காட்டிலுப்
பைமரங்கள் சேர்ந்ததொருவயிரங்க ளானநல்லபட்
டை மச்சுகட்டு மாளிகைக்கு மச்சுவட்டம் பலகை
மக்கப்புளிச்சட்டம் மாதிரிபலகை குதிரைப்பட்
டைகுருவிக்காய் சுத்துக்கால்சட்டம் கூடத்துக்கம்
பம் சங்கொளொடுதூலம் வெழல்கட்டுத்தாவரங்கள்வா
சக்கதவு மாளிகைக்குநல்ல வகையானமரங்கள் ஈட்
டிகள்வாங்கிபலஆரைக்கதவு கீழ்மெத்தைமேல்மெத்
தை தாங்கும்நல்லசட்டம் அலமார்க்கதவுகள் ஆள்
களுக்குமணுவள் மரங்கள்வகையெல்லாம்வகைவகை
யாய்வைத்து மகாகனமாகக் கப்பலிலே வாத்திய
கோஷ்டம் மகவீணைநாகசுர விருதுகள்பேசி மேள
மொடுதாளம் விருதுகின்னரங்கள் தாளமொடு மத்த

ளம் தருமவாத்தியங்கள் இதுகளுக்குமேலான கிடு கிடுவாத்தியம் காளாஞ்சிதுத்தாரி கனகதம்பட்டை புள்ளாங்குழல்நாதம் பிடீல்வாத்தியம் பெருகாளை சிறுகாளை சாரங்கிவாத்தியம் பம்பைநாகசுரம் பதி னெட்டுவாத்தியம் பாகவதகோஷ்டம் சங்கீதகீர்த் தனம் வீணையொடு சின்னங்கள் வேதாந்த வேதியர் கள் தாம்தாமென்றாத அதிர்வேட்டுகள் புருசு ஆகா சபாணம் அழகானமத்தாப்பு ஐந்துதலைபாணம் பொரிபாணம் வெடிபாணம் இடிபாண வித்தை புட் பபாணம்நல்ல சுப்பல் பாணங்கள் சுழல்பாணம்எழு ல்பாணம் சீறிவரும்பாணம் சீமையில் செய்துவரும் பலவிதபாணம் கம்பநல்ல கையில்விடும்பாணம்காத் தியுள்ள நட்சத்திரபாணம் ரீரீயெனப் பேசிவரும் தவளைப்பாணங்கள் பாணவகை தினுசெல்லாம் பத் திரமாய்வைத்து பாங்காகக்கப்பலிலே பலதேசசரக் கு கொச்சிதேசம் நல்ல குடகுதேசம் கோசிலபுரத ங்கள் காபுரவங்கணங்கள் கர்னாடதேசம்காஞ்சிபுரம் நல்ல காவேரிதீர்த்தம் கண்ணூறுபாயும்நல்ல சோழ தேசம் மலையாளமொடு மதுரைதெற்கு தேசங்கள் தஞ்சையொடு திருநெல்வேலி சீமைமண்டலம் துண் டீரக்காரங்கள் குற்றாலம் கொரநாடு கும்பகோணதே சம் கோதாவரிதீரம் கொண்டவட்டிசீமை ஏசாளம்

நேபாளம் பங்காளதேசம் வாய்சொல்லு தெரியாத மாறுவார்தேசம் இராச்சியத்தில் செழிப்புள்ள மைசூறுதேசம் நடுச்சோழமண்டலம் நாகரீகக்காஞ்சி அங்கதேசம்நல்ல வங்கதேசம் கலிங்கதேசம் கண்ணூடிபாயும்நல்ல கல்கத்தாசீமை டில்லிதேசம் நல்ல சிந்துதேசம் கும்பதெரியாதவொரு ராணிதேசங்கள் துவாரகாபுரிநல்ல சேத்திராபுரமும் வாரணைகுரு க்ஷேத்திர கீழ்நாடு மேல்நாடு தென்னாடுதேசம் பற்பலதேசத்தில் சரக்குகள்கொண்டு திக்குதிக்காய் கப்பலெல்லாம் ஒருவழியாய்ச்சேர்ந்து ஸ்ரீராமஜெயமென்று யெழும்பியேகப்பல் துடுப்புகள்காட்டியுள்ள ஜலத்தையுமோதுக்கிச் சீர்பொழியும் கப்பல் வருஞ் சேதியைக்கேட்டுத் திக்குதிக்குகள்தோறும் வேட்டுகள்போட்டு சிம்பக்கொடிகட்டிச் சிங்காரமாக ஜெயமுள்ளகப்பல்வந்து சேர்ந்துதையா சுவாமி ஏலேலோ ஏலலிலோ.

உலகமெல்லாம் பெற்றெடுத்த அம்பாள் உத்தமியாள்பத்தினி மகிமையுடன் தேசமெல்லாம் வந்தருளும் கப்பலிலே.

ஜ ரு ர்.

மலையாளம் கோங்குடன் நிலசேருமுடனே மைசூர் களத்தூரு வந்தேமகிழ்ந்து நலமான கோயிலடி

இளங்காடுநேரே கண்டிபூந்திருக்காடு பள்ளிசெம்ப லகை கோலமுள்ள திருவையாறு திருத்தாலூர் ஆறையூர்கொஞ்சம் பசுபதியார்கோயில் தஞ்சைநகர் கண்டு சன்னவன்மைக்காவல் உண்மையாய்ப் பார்த்து தானுமாய் பாய்மரம் மூன்று பதினாறு நன்மையென்னுந் தேனூறெ சீனிக்கலப்பு நற்பமுடனேசொற்பமாய் பாருதந்திரம்தானல்ல துப்பாக்கியீட்டிசீராய் நடுக்கட்டு சொகுசுடனே தூங்குமஞ்ச சப்ரமுடன் கட்டினார்தாலி அந்தந்ததேசாதிபதிகள் இஷ்டாங்கமாகக்கொண்டு சாஷ்டாங்கமாகவாச்சே சுருக்கிச்சொல் பக்தியுடனேவந்து இங்கிலீஷ் பிரான் தலாட்டு அரைநாளேப்பூட்டு நீர் நெருப்புகொண்டே பணிந்தொருநீரங்கிதிறந்து குழுதமுடன் கப்பலிது சமுகநிறைகண்டு தொண்டரெல்லாம்புகழும் வேத்வல்லித்தாயார் துரிதமுள்ளகப்பலில் தப்பாமல்வருகுதப்பா ஏலேலோ ஏலலிலோ.

அதிபதியான அன்னக்கொடி அப்பால் தருமந்திபுண்யநதி அம்பாள் கப்பல் கடலோட்டத்தத்தையா யரைநொடியில் வருகுதிங்கே.

ஐரு ர்.

இந்தியசோழமண்டலமதுகடந்து அந்தந்ததேவஸ்தலங்களதுகண்டு மும்மாரிமழைபொழியும் களத்

தவொருநெல்விளையும் மற்றுமுள்ளசீமை அவ்வூரு கப்பலிது ஆனந்தமாக அன்புடனே சுத்தியல்லோ எல்லைதுறைதாண்டி இருகாதுகொப்பு இரட்டை யொட்டியாணம் லட்சம்பொன் பெற்றதொரு பச்சைவடங்கொண்டுவந்து அம்மனுக்குக் கொடுத்தே யணிந்து கோலமுள்ளகப்பலுக்கு மேலும்வழிகாட்டிசீலமுள்ளகப்பலிது வழிகளெல்லாந்தாண்டி சென்னபட்டணம் துறைவந்து சேர்ந்துதையா சுவாமி ஏலேலோ ஏவலிலோ.

உத்தமியாள் வேதவல்லி பத்தினியாள் கப்பலிது சுத்தமுள்ள பட்டணத்தில் சேர்ந்ததென்று தான்பாட. ஐருர்.

உலகமாதாவே உத்தமிகாமாட்சி உமையவள் தன்னருள் உத்தாரம்பெற்று அமையுமிந்த கப்பலுக்கு சமயம்பார்த்து ஆகாரங்கண்டெடுத்து அத்தட்டில் சேர்த்து ஸ்ரீகாரங்கண்டெடுத்து சிக்கந்திருப்பி ஆகாரங்கண்டெடுத்து கப்பிகயர்மாட்டி நமச்சிவாயங்கொண்டு நங்கூரம்பாச்சி நாலுவேதத்தாற் பீரங்கியேற்றி அஷ்டாட்சரத்திலேகாற்றுகளும்பாய அம்மனுடன் கப்பலிது விஸ்தாரமாக அன்பாகக்கணபதியை முன்பாகவைத்து அந்தமுடன் கப்பல்வந்துசேர்ந்துதையா சுவாமி ஏலேலோ ஏலலிலோ.

கப்பலென்றால் கப்பலிது கப்பல்வரும் பருவதி ருல் ஜனங்களது கரைபுரண்டும் குமிளமிடும் இருக ரையும் நீர்பெருகி தத்தையா ஏகஜலம் வந்திடுமாம் வேதவல்லி அதையறிந்து அம்மன்கால்வரிசை யெச் சரித்தாள்.

ஐ ரு ர்.

காவேரிதானறிந்து வேதவல்லித்தாய்மேல் கடா ட்சம்வைத்து கப்பல்தனை துறைகொணர்ந்துசேர்த் து கரைபுரண்டு காவேரி வெகுவளஎம்வரவே அம் மனிடமகிமை யாரறிவாரென்று ஆதிரங்கர்சன்னதி க்குப் பின்பாகவேதான் அலைவந்துமோதவே கரை தனிலேயொதுக்கி உத்தரபாரிசம் ஒருபக்கந்திருப் பிலுங்காரமாகவே உருண்டமண்வாரி சத்தமிட்டுதத் தளித்து தான்வரண்டுகப்பல் சதாகாலம் அம்மனை சிந்தைதனிலெண்ணி வேதவல்லித்தாயார்கடாட்சத் தினாலே வேகமுடனிங்குவந்த கப்பலிதுகண்டீர் சுவாமி ஏலோலோ ஏலேலோ.

வாழியவே வாழியவே சுத்தமகமேரும் வாழிய வே ஈஸ்வரரும் பார்வதியும் தத்தையா இன்பமுட ன்வாழியவே ஸ்ரீமகாவிஷ்ணுவும் இலட்சுமியும்கோ விந்தா மண்டபத்தில் வாழியவே பிர்ம்மாவும் சரஸ் வதியும் பூமிதனில் வாழியவே.

ஐ ரூ ர்.

தேவேந்திரனிந்திராணி தேவர்களும்வாழி திர முள்ளமுனிவர்களும் சித்தர்களும்வாழி முப்பத்து முக்கோடி தேவர்களும்வாழி நாரதர்முதலான கிம் புருடர்வாழி நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும்வாழி நலமுள்ள கருடகாந்தருவர்வாழி விக்கினவிநாயகரு ம்நித்தமிகவாழி வேலவரும்பத்தினிகளிருவர்களும் வாழி ஸ்ரீரங்கநாயகரும் ரங்கநாயகியும்வாழி சீவ காரணரான பார்த்தசாரதியுஞ் சீரான வேதவல்லித் தாயாரும்வாழி சென்னைபுரியாளுகின்ற துரைமக்கள் வாழி இன்னுஞ்சிலதேசங்களை ஆளுகின்றராசர்கள் என்னாளும்வாழி சீலமுள்ள கப்பல்கவி கற்றவர்கள் கேட்டவர்கள் சிறப்பாய் படிப்போர்கள் ஜெயம் பெற்றுவாழி மேலானயிக்கதையை அச்சிதனிலிட் டோர் மென்மேலும் வாழிமிகவாழி.

ஏலேலோ குருபாதம் அம்பாள்
ஏலேலோ குருபாதம்.

பலசரக்கு ஏலப்பாட்டு முற்றிற்று.

ரிங்வோரங்கியூர் என்னும்

படை சங்காரன்.

ஐயா, உம்முடைய தேகத்தில் எந்த பாகத்திலாவது மேகப்படைகள் மேக காரகப்படைகள் அல்லது பெண்களுடைய தேகத்தில் எவ்வித படைகள் இருந்தாலும் எமது (படை சங்காரன்) என்னும் ஔஷதத்தில் போதுமானது எடுத்து படையுள்ள விடத்தில் தடவி நன்றாய்த்தேய்த்து மூன்றுமணிநேரம் பொறுத்து சோப்பு அல்லது சீக்காய் போட்டு தேய்த்து அலம்பிவிடவும். இதுபோல் இரண்டு அல்லது மூன்றுவேளை மேற்சொன்னபடிசெய்தால் நல்ல குணத்தைக் காணலாம். இந்த மருந்தினால் அனேகர் சுகமடைந்து நற்சாட்சி பத்திரங்களும் அனுப்பியிருக்கிறார்கள்.

ஒரு புட்டியின் விலை ரூபா—1.

எமது கேட்லாக் வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு.

பி. நா. லோகநாதமுதலியார் அண்டு கோ,

'நாராயணவிலாஸ்'

பிரமபூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்